1971 அக்டோபர் 21]

திரு. கா. வேழவேந்தன் : வங்காள விரிகுடாவில் சுரு மீன் அதிகமாயிற்றே, அவற்றைப் பிடித்து தமிழகத்திலேயே ஷார்க் லிவர் ஆயில் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சுரு மீன் மாத்திரம் அல்ல-அதிக லாபம் தரக்கூடிய எல்லாவகை மீன்களையும் பிடிக்க, நல்ல முறையில் ஆய்வு செய்யப்படும். அதற்காகவே படகுகள் வாங்குகிறோம். இதனால் அதிக லாபம் கிடைக்கும் என்றே அரசாங்கம் கருதுகிறது.

Price of coffee in hotels

*6 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken by the Government to reluce the price of coffee in the hotel ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஓட்டல்களில் விற்கப்படும் காப்பி விலையைக் குறைக்க அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது :

(அ) காப்பிக்கொட்டை உற்பத்தி குறைந்ததனாலும், அதன் காரணமாக நாட்டில் விற்பனைக்காக காப்பிக்கொட்டை குறைந்த அளவு வழங்கப்பட்டதனாலும், 1970-ஆம் ஆண்டில் காப்பிக் கொட்டை விலை உயர்ந்தது. காப்பி வாரியமும் தனது விற்பனை நிலையங்கள் மூலமாக காப்பிக்கொட்டை விற்பனை செய்வதை நிறுத்தியிருக்கிறது. இது குறித்து அரசு உடனடியாக இந்திய அரசுக்குக் கடிதமெழுதியது. காப்பி வாரியமும் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வதை 1-1-71 முதல் மீண்டும் தொடங்கியது. தற்போது காப்பிக்கொட்டை தாராளமாக வழங்கப்படுகிறது. அத்துடன் விலையும் குறைந்துள்ளது.

(இ) 27-8-70 அன்று ஓட்டல் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்று நடந்தது. காப்பி விலையைக் குறைப்பதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது. காப்பி விலை கோப்பை ஒன்றுக்கு 30 காசிலிருந்து 25 காசாகக் குறைந்தது.

(உ) ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு காப்பிக் கொட்டை வழங்கும் 11-9-70 அன்று பெங்களூர், காப்பி வாரியத்திற்கு எழுதப்பட்டது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு காப்பிக்கொட்டை நம்மால் வழங்க இயலாது என்று காப்பி வாரியம் தெரிவித்துள்ளது. சங்கத்தினர் தொகுதி அனுமதியைப் பெற்று, ஒவ்வொரு திங்களும் நடத்தப்படும் தொகுதி ஏலத்தில் பங்கு கொண்டு தமக்குத் தேவைப்படும் காப்பிக்கொட்டையை வாங்கிக் கொள்வதற்கு தமக்கு ஆட்சேபணை எதுவுமில்லை என்றும் வாரியம் தெரிவித்துள்ளது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : காப்பி காம்போனன்ட்ஸ் விலை குறைந்தால்தான் காப்பி விலை குறையும். ஆகவே அவற்றின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, காப்பிக் கொட்டை, சர்க்கரை, பால் ஆகியவைதான் அதன் சேர்க்கைப் பொருள்கள். காப்பிக்கொட்டை விலை குறைந்திருக்கிறது. பால் விலையும் குறைந்திருக்கிறது. கட்டுப்பாட்டை எடுத்த பிறகு சர்க்கரை விலை உயர்ந்திருக்கிறது என்றாலும், அதிகம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : காப்பி வாரியத்தில் இருந்து முன்பெல்லாம் ரேஷன் கார்டு கொடுத்து காப்பிக்கொட்டை, காப்பித்தூள் விநியோகம் செய்தார்கள். அந்த முறை நிறுத்தப் பட்டது. காரணம் என்ன ? மீண்டும் அதைப்போன்ற ஏற்பாட்டைக் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியதற்குத்தான் அதுபோல தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்க முடியாது, வேண்டுமென்றால் ஏலத்தில் அரசாங்கமே எடுத்து விநியோகிக்கலாம் என்றார்கள். அரசாங்கம் ஏலம் எடுப்பதாக இல்லை.

திரு. ஓ. என். சுந்தரம் : சர்க்கரை இல்லாமல் காப்பி சாப்பிடுகிறவர்களுக்காவது காப்பி விலையைக் குறைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சர்க்கரையை மேசைமீது கொண்டுவந்து வைத்துவிடுகிறார்கள். போட்டுக்கொண்டாலும், இல்லாவிட்டாலும் ஒரே விலைதான்—அதற்காகத் தனி விலை இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. நா. வீராசாமி : நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கிலோ சர்க்கரை 5 ரூபாய் விற்றது. இப்போது சர்க்கரை மலிவாகக் கிடைக்கிறது. கள்ளுக்கடை வந்த காரணத்தால் பால் மலிவான விலையில் கிடைக்கிறது. ஆகவே, காப்பி விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க சட்டம் எதுவும் இல்லை. அழைத்து வைத்துப் பேசுகிறோம். அப்படிப் பேசியதன் விளைவாகத்தான், 30 காசில் இருந்து 25 காசாக காப்பி விலை குறைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, விலையைக் குறைப்பதனால், காப்பியின் தரத்தைக் குறைக்காமலிருக்க அரசாங்கம் ஆலோசனை ஏதாவது சொல்லியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதையும் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மதுவிலக்கைத் தள்ளி வைத்திருப்பதால் காப்பி ஓட்டல் வியாபாரம் மந்தமாக இருக்கிறது என்று சொல்வது உண்மையா ?

1971 அக்டோபர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு அப்படி எதுவும் தகவல் வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, சில ஓட்டல்களில் ஒரு கப் காப்பி 50 பைசா, 75 பைசா என்று விற்கப்படுகிறதே, அதற்கு ஓர் உச்ச வரம்பை நிர்ணயிக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 'எக்ஸ்பிரஸ் காபி' என்பது 75 பைசா என்று விற்கப்படுகிறது. ஓட்டல்களை 'ஏ', 'பி', 'சி' என்று தரம் பிரித்து விடுங்கள், 'ஏ' ஓட்டலில் காபி இன்ன விலை என்று போட்டு விடுங்கள் 'பி' ஓட்டலில் காபி இன்ன விலை என்று போட்டு விடுங்கள் என்று ஓட்டல் அதிபர்களிடத்தில் சொல்லியிருக்கிறோம். இந்த யோசனையைப் பரிசீலித்துச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

Export of handloom goods

* 7 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the handloom industry has increased the export of its goods in the year 1970–71; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) 1970–71-ஆம் ஆண்டில் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்தது குறித்த திட்டவட்டமான புள்ளி விவரங்கள் உடனே கிடைக்கவில்லை. ஆனால், கைத்தறித் துணிகள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவால் எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதிப் புள்ளி விவரங்களிலிருந்து 1970-ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணிகளின் மதிப்பு ரூ. 2,654.66 லட்சமாக இருக்குமெனத் தெரிய வருகிறது. ஆனால், 1969-ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறித் துணி ரூ. 2,607.30 லட்சம் ஆகும்.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, தரம் குறைந்த (sub-standard) பொருள்களை ஏற்றுமதி செய்யாமல் இருக்க, தகுந்த நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஏற்றுமதி செய்யும்போது சில தவறுகள் நடந்து வருகின்றன. தரம் குறைந்ததாக இருக்கிறது என்ற குறையைச் சொல்கிறார்கள். இங்கே இருக்கின்ற ரகம் ஒன்று, அனுப்புகின்ற ரகம் வேறு ஒன்றாக இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கக் கூடாது என்று ஏற்றுமதியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இதுகுறித்து மத்திய அரசிடமும் கூறியிருக்கிறோம். மத்திய அரசும் இதைக் கவனிக்கும்.

Thiru K. M. SUBRAMANIAM: Do these figures pertain to the All-India export or export out of Tamil Nadu production alone?